திருச்சிற்றம்பலம்



சிதம்பரம்

## குருநமச்சிவாயர்

அருளிய

# நமச்சிவாய மாலை

சிவதொண்டன் சபை

செங்கலடி - இலங்கை.

10 - 10 - 92.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A394

திருச்சிற்றம்பலம்

PROF. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

## சிதம்பரம்
## குருநமச்சிவாயர்
அருளிய

# நமச்சிவாய மாலை

11622 5.C

சிவதொண்டன் சபை
செங்கலடி - இலங்கை.
10 - 10 - 92.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்

உ

குரு நமச்சிவாயரால் அருளப்பட்ட நூல்களுள் ஒன்றே நமச்சிவாயமாலை ஆகும். இந்நூல் நூறு கண்ணிகளால் ஆயது. தமிழ் மொழிக்கு முதலில் வரும் உயிர், மெய் எழுத்துக்களை முறையே ஒவ்வொரு கண்ணியினதும் முதலில் தொடங்கிச் செய்யப்பட்டது. சில எழுத்துக்களுக்குக் கண்ணிகள் இல்லாமையாலேயே நூற்றெட்டாக வரவேண்டியது நூறாக உளது.

பஞ்சாக்கரம் தூல, சூக்கும, காரண, அதிகாரண, மனு என ஐவகைப்படும். இந்நூல் அவற்றுள் தூலபஞ்சாக்கரமாகிய 'நமச்சிவாய' என்பதைச் சிறப்பாகக் கடையில் வைத்து, அம்மந்திரத்துக்குரியவராகிய சிவபெருமானின் பேராக்கி, விளித்துரை வணக்கமுறையாகப் பாடப்பட்டதாகும்.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியன முதற்குறிப்பாற் பெயர் பெற்றன போல இது நமச்சிவாய என்னும் கடைக்குறிப்பாற் பெயர் பெற்றதாகும். ''எந்நாளோ'' எனவும் ''பராபரமே'' எனவும் வருங்கடைக்குறிப்பால் முறையே 'எந்நாட்கண்ணி' எனவும் 'பராபரக்கண்ணி' எனவும் பெயர்பெற்றமையும் இதற்குச் சான்றாகும்.

இந்நூல் கலைஞானமாகையால் தூலபஞ்சாக்கரத்தாற் கூறினார். அன்றியும் யாரும் எளிதில் பொருள் விளங்குமாறு எளிய நடையில் இன்பநயமுள்ளதாகச் செய்யப்பட்டிருக்கிறது.

எங்கள் குருநாதன் ஒருமுறை இந்நூலினைக் கல்லச்சடித்துக் கொடுத்து, எல்லாரையும் மனனஞ்செய்து படிக்கச் சொல்லும்படி எங்களுக்கு ஆணை அருளினார். அத்தோடு தாமும் நமச்சிவாயப் பதிகங்கள் இரண்டினை நமச்சிவாயப்பத்து ,நமச்சிவாயமாலை எனப் பாடியருளியிருக்கிறார். நாடோறும் இராத்துயில் கொள்ளச் செல்லுமுன் நமச்சிவாயப்பத்துப் படித்தே செல்வது அவர்களின் வழக்கமாகவும் இருந்தது. நற்சிந்தனையிலுள்ள குருபரன் அருளிய நமச்சிவாயப்பத்தினை இந்நூலில் இணைத்துள்ளோம்.

பஞ்சாக்கரத் தியானம் செய்வோர் தொடங்குமுன் இதனைப் பாடமாக்கி ஓதினால் அவர் விரும்புவனவற்றை எளிதிலளிக்க வல்லது.

இந்நூலினைப் பாடியருளிய சித்தர் வரலாறு பின்னிணைப்பாக உள்ளது.

சிவதொண்டன்சபை
செங்கலடி, இலங்கை
10 - 10 - 92.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# நமச்சிவாயமாலை

## காப்பு

மந்திர நமச்சி வாய மாலைநான் செப்புதற்குக்
கந்தவே டனக்கு மூத்த கணபதி காப்புத் தானே.

அறைமறை யயனு மாலு மமரரு முனிவர் தாமும்
முறைமுறை வணங்கி யேத்தும் முதல்வனே நமச்சி வாய.
1

ஆதியாய் வேத நான்கா யடிமுடி தெரியா வண்ணஞ்
சோதியாய் நிறைவாய் நின்ற துணைவனே நமச்சிவாய.
2

இணையடி தேடிக் காணா வேழுல களந்த மாயன்
கணையதா வெயின்மூன் றெய்த கடவுளே நமச்சி வாய.
3

ஈட்டிய பொருள்போ லுன்ற னிணையடி பணிவார் துன்பம்
வாட்டிய செம்பொன் மேனி வள்ளலே நமச்சி வாய.
4

உமையொரு பாகம் வைத்த வும்பர்க டம்பிரானே
அமைதரு மணியே முத்தே யண்ணலே நமச்சி வாய.
5

ஊனுமா யுயிரு மாகி யுள்ளுமாய்ப் புறம்பு மாகித்
தாணுவாய்ச் சகத்துக் கெல்லாந் தந்தையா நமச்சி வாய.
6

எழுபிறப் பதனான் மாழ்கு மென்னுயிர்க் கிரங்கி வந்து
பழுதற வாண்டு கொள்ளும் பரமனே நமச்சி வாய.
7

ஏடவிழ் கோதை மாத ரிளமுலை மயக்கப் பட்டு
நீடுத லொழிக்க வல்ல நிமலனே நமச்சி வாய.
8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயமேற் றுண்டாய் பாத மன்பிலேன் தலைமேல் வைத்த
செய்யனே வானோர் போற்றுந் தேவனே நமச்சிவாய.
9

ஒன்பது வாயிற் கூட்டி லொடுங்குயி ருய்யும் வண்ணம்
பொன்பொதி மலர்த்தாள் காட்டும் புனிதனே நமச்சி வாய.
10

ஓமெனு மெழுத்தி னுள்ளே யொளியதாய் விளங்குகின்ற
வாமனே கருணை நல்கும் வள்ளலே நமச்சிவாய.
11

ஔவியம் பேசாவண்ண மடிமையைத் தடுத்தாட் கொள்ளுந்
திவ்விய மணியே முத்தே தேவனே நமச்சி வாய.
12

அக்கினைப் பூண்டு கொண்டே யரியவெண் ணீறு பூசுஞ்
சொக்கனே செக்கர் மேனித் தூயனே நமச்சி வாய.
13

கம்பமார் களிறு ரித்த கச்சியே கம்பா செம்பொன்
அம்பலத் தாடு கின்ற வண்ணலே நமச்சி வாய.
14

ஙகரம்போல் வளைந்து மூன்று நாயினே னுணவு தேடும்
பகரொணா வின்ன றீர்க்கும் பரமனே நமச்சி வாய.
15

சத்தியுஞ் சிவமு மாகித் தாணுவாய்ச் சகத்துக் கெல்லாம்
முத்தியே யளிப்பா யாதி முதல்வனே நமச்சி வாய.
16

ஞமனுட னிந்தி ரற்கு நாரணற்கார ணற்குஞ்
சமனுற முதலாய் நின்ற தாணுவே நமச்சி வாய.
17

இடவிய கபால மேந்தி யேழிரண் டுலக மெல்லாந்
தடவியுங் காண வொண்ணாச் சங்கரா நமச்சி வாய.
18

இணங்கிய கமலப் பொற்றா ளிருவரு மேத்தி நின்று
வணங்கவம் பலத்து ளாடும் வானவா நமச்சி வாய.
19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டமிழ் முனிவன் றன்னைச் சமமுறத் தென்பாலேவும்
அண்டரோ டயன்மால் காணா வாதியே நமச்சிவாய.
20

நஞ்சணி கண்டத் தானே நதிமதிச் சடையி னானே
கொஞ்சுபச் சிளம்பெண் பாகங் கொண்டவா நமச்சிவாய.
21

பண்டுல களந்த மாலும் பங்கயத் தயனுந் தேடிக்
கொண்டுசென் றறியவொண்ணாக் குரவனே நமச்சிவாய.
22

மங்கையோர் பாகம் வைத்து வளர்பிறை முடிமேல்வைத்துச்
செங்கையின் மழுமான் வைத்த தேவனே நமச்சி வாய.
23

இயக்கரு முனிவர் தாமு மிருகரங் குவித்து நின்று
வியக்கவம் பலத்தி லாடும் விமலனே நமச்சி வாய.
24

அரகர சிவனே யென்று மம்பலத் தாடி யென்றும்
பரவுவார் துயரந் தீர்க்கும் பரமனே நமச்சி வாய.
25

இலவிதழ் மடவார் தங்க ளேவலுக் குரிய னாகி
அலமரு மென்னை யாண்ட வமலனே நமச்சி வாய.
26

வளமுறு மங்கை தன்னை மற்றிடப் பாகம் வைத்தே
ஒளிமதிக் கீற்றைச் சூடு மொருவனே நமச்சி வாய.
27

அழகிய முருக னுக்கோ ராறுமா முகமுங் கூர்மை
பழகிய வேலு மீந்த பரமனே நமச்சி வாய.
28

இளமையு மூப்பு மில்லா விறைவனே யெம்பிரானே
வளமையாங் கருணை மோன வள்ளலே நமச்சி வாய.
29

அறவனே பாதந் தேடி யன்றிரு வோருங் காணா
இறைவனே யென்னைக் காக்கு மீசனே நமச்சி வாய.
30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனந்தலி னின்றாள்போற்றியருச்சிக்குமடியார் தங்கள்
இனந்தனி லென்னை வைப்பா யீசனே நமச்சி வாய.
31

கரியுரி யதனைப் போர்த்துக் கபாலமுங் கையி லேந்தித்
திரிபுர தகனஞ் செய்த தேவனே நமச்சி வாய.
32

காலனை யுதைத்த காலா காமனை யெரித்த கண்ணா
பாலனைக் கறிய தாக்கும் பரமனே நமச்சி வாய.
33

கிளிமொழி யமுதச் செவ்வாய்க் கெவுரியைப் பாகம் வைத்த
ஒளிமதிச் சடையி னானே யொருவனே நமச்சி வாய.
34

கீண்டுவெற் பெடுத்த வீரக் கேடிலா வரக்கன் றன்னை
மாண்டுக விரலா லூன்றும் வள்ளலே நமச்சி வாய.
35

குழைகுமி ழடருங் கண்ணாட் கோதையைப் பிரிந்தபோது
பிழைசெயு மதனைக் காய்ந்த பிஞ்ஞகா நமச்சி வாய.
36

கூவிள மறுகு தும்பை கொன்றைவெள் ளெருக்கூமத்தை
மேவிய சடையி னானே வித்தகா நமச்சி வாய.
37

கெங்கையைச் சடைமேல்வைத்துக்கெவுரியைப்பாகம்வைத்தல்
அங்கணா நீதியோசொ லையனே நமச்சி வாய.
38

கேசவன் வணங்கிக் கண்ணாங் கேழ்கிளர் கஞ்சஞ் சூட்ட
ஆசியோ டாழி யீந்த வமலனே நமச்சி வாய.
39

கைச்சிலை மேரு வாகக் கரியமால் பகழி யாக
உச்சிதப் புவித்தே ரேறு மொருவனே நமச்சி வாய.
40

கொற்றவன் றனக்கு முன்னேகுதிரையி லேறிக் காட்டிப்
பொற்றுகிற் கோலாற் கொள்ளும் பூரணா நமச்சி வாய
41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணமா மலையில் வாழுங் கோதிலா வாதி யேநீ
ஆணல்லை பெண்ணு மல்லை யத்தனே நமச்சி வாய.
42

சந்திரன் விளங்குஞ் சென்னித் தலைவனே தம்பி ரானே
இந்திர னிமையோர் போற்று மிறைவனே நமச்சி வாய.
43

சாந்தணி முலையா டன்னைத் தண்புன லெனப்பேர்மாற்றி
ஏந்துசெஞ் சடையெம் மானே யிறைவனே நமச்சி வாய.
44

சிரமது கையி லேந்திச் சீரிய முனிவர் தங்கள்
விரகினை யழித்த மேரு வில்லியே நமச்சி வாய.
45

சீதள கமல வாவித் திருநாவ லூரன் றன்னைச்
சாதனங் காட்டி யாண்ட தாணுவே நமச்சி வாய.
46

சுத்தவெண் ணீறு பூசிச் சுடலையி னடன மாடும்
அத்தனே யாரூர் வாழ மண்ணலே நமச்சி வாய.
47

சூரியன் றுயரந் தீர்த்தாய் தோன்றிமுப் புரத்தைச் சுட்டாய்
ஆரிய வெள்ளி வெற்பி னத்தனே நமச்சி வாய.
48

செஞ்சிலை கையி லேந்திச் சிரித்துமுப் புரமெரித்தாய்
தஞ்சமென் றுனைய டைந்தேன் தாணுவே நமச்சி வாய.
49

சேதன வடியா ரோடு திருப்பெருந் துறையில் வந்து
வாதவூ ரரசை யாண்ட வரதனே நமச்சி வாய.
50

சைவனே யைம்பு லங்க டமைமனஞ் சாரா வண்ணங்
கைவர மருள வேண்டுங் கடவுளே நமச்சி வாய.
51

சொரிமலர்க் கொன்றை தும்பை சொல்லிய வறுகு தாளி
விரிமலர்ச் சடையாய் வெள்ளி வெற்பனே நமச்சி வாய.
52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோலைசூ ழால வாயிற் சோதியே சமணை மாய்க்கப்
பாலறா வாயி னார்க்காப் பரிந்தரு ணமச்சி வாய. 53

தந்தையுந் தாயு மில்லாத் தாணுவே யாண்பெண்ணல்லாய்
இந்திர னயன்மால் போற்று மிறைவனே நமச்சி வாய. 54

தாதவிழ் கொன்றை தும்பை சங்கொடுதலையுங் கொண்ட
நாதனே வேத மோது நம்பனே நமச்சி வாய. 55

திரிபுர மெரித்த மூர்த்தி தென்னவன் முன்னே முன்னாள்
நரிதனைப் பரிய தாக்கு நம்பனே நமச்சி வாய. 56

தீதிலா வாத வூரர் செய்கைகண் டுளம கிழ்ந்த
நாதனே பரனே வானோர் நண்பனே நமச்சி வாய. 57

துணைவனே யன்பர் தங்க டுன்பறுத் தருளு மூர்த்தி
பணைமுலை யுமையாள் பங்கா பரமனே நமச்சி வாய. 58

தூதுசுந் தரற்காச் சென்ற சோலைசூ ழாரூ ரையா
ஆதியே யரனே வெள்ளி யசலனே நமச்சி வாய. 59

தென்னவனாகக் கூடற் சேர்ந்துசெங் கோல்செ லுத்தி
அந்நகர் தன்னை யாண்ட வமலனே நமச்சி வாய. 60

தேடியே யிருவர் காணாத் திருவடி மனத்துள் யாரும்
நாடியே வணங்க நின்ற நம்பனே நமச்சி வாய. 61

தையலோர் பாகம் வைத்துச் சடையிலே கங்கை வைத்த
ஐயனே யாரூர் வாழு மண்ணலே நமச்சி வாய. 62

தொல்லுல கெல்லாம் போற்றுஞ் சோதியே சூல பாணி
வில்லென மேரு வாங்கும் வித்தகா நமச்சி வாய. 63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோத்திரஞ் செய்மா யற்குச் சுடரொளி யாழி யீந்த
ஆத்தனே யடிய ரன்பிற் களியனே நமச்சி வாய.
64

நஞ்சினை யருந்தி மாய னான்முகன் முதலோர் நாண
அஞ்செழுத் துருவ மான வத்தனே நமச்சி வாய.
65

நாரண னலரோ னிந்திர னாடிமுன் வணங்கி நிற்ப
ஆரண மோது கின்ற வாதியே நமச்சி வாய.
66

நிற்பவர் நெறியை நோக்கி நெஞ்சைவிட் டகலா தானே
கற்பனை கடந்த சோதிக் கடவுளே நமச்சி வாய.
67

நீறணி மேனி யானே நிமலனே யமரர் கோவே
ஆறணி சடையி னானே யண்ணலே நமச்சி வாய.
68

நுண்ணிடை மாது பாகா நோக்குவார் தம்மை நோக்குங்
கண்ணுதற் பரனே தேவா கடவுளே நமச்சி வாய.
69

நூபுர பதமா தோடு நுவலருஞ் சபையி லாடும்
மாபுரத் தவர்கள் காலா வானவா நமச்சி வாய.
70

நெஞ்சக மலரி லுன்னை நினைவற நினைந்த பேருக்
கஞ்சலென் றருளிச் செய்யு மண்ணலே நமச்சி வாய.
71

நேத்திரந் தன்னால் வேளை நெருப்பெழச் சுட்டு விட்டாய்
சாத்திர முனிவோர் போற்றுந் தாணுவே நமச்சி வாய.
72

நைந்துனை நினைப்பார் பாவ நாசம தாக்கி நிற்பாய்
பைந்தொடி பாகங் கொண்ட பரமனே நமச்சி வாய.
73

நொந்தவரிளைத்தோர் தம்மைநொடியளவினில்வாழ்விக்குங்
கந்தரங் கறுத்த மூர்த்தி கடவுளே நமச்சி வாய.
74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கமூன் றுடையா யென்னை நோக்கியே துரியா தீதத்
தூக்கத்தில் வைப்பதென்றோ சொல்லுவை நமச்சி வாய.
75

நௌவியை யேந்துங் கையாய் நயமுட னடியார் தங்கள்
வெவ்வினை யெல்லாந் தீர்க்கும் விமலனே நமச்சி வாய.
76

பத்தராய்ப் பணிவார் தம்மைப் பதங்கொடுத் தாளு மையா
சுத்தனே வேதஞ் சொன்ன துணைவனே நமச்சி வாய.
77

பாடுவார் மூவர் தம்மைப் பதங்கொடுத் தாண்டமூர்த்தி
தேடுவார் தேடு கின்ற செம்பொனே நமச்சி வாய.
78

பிறையணி சடையி னானே பிஞ்ஞகா வடியார்க் கெல்லாங்
குறைவற வாழ்வ ளிக்குங் கொற்றவா நமச்சி வாய.
79

பீடுறப் பூசிப் பார்தம் பெருவினை யறுக்கு மூர்த்தி
ஆடல்சே ரெருதி லேறு மண்ணலே நமச்சி வாய.
80

புகலுறுங் கல்லா லன்பு பூண்டெறி சாக்கி யர்க்குத்
தகவுற முத்தி நல்குந் தாணுவே நமச்சி வாய.
81

பூசுவெண் ணீறுபொங்கப் பொருவிலா வம்மை காண
நேசமோ டாலங் காட்டி னிருத்தஞ்செய் நமச்சி வாய.
82

பெண்ணமு தனையார் நாணும் பெட்புறு வளையுந் தூசும்
எண்ணுறு பலியாக் கொண்ட விறைவனே நமச்சி வாய.
83

பேயுடன் காட்டி லாடும் பிஞ்ஞகா பெரியோர் தங்கள்
தூயநன் மனத்து ளானே சுத்தனே நமச்சி வாய.
84

பையர வணையிற் றங்கும் பாரளந் தோற்குப் பாதி
மெய்யளித் தருள்கூர்ந் திட்ட விண்ணவா நமச்சி வாய.
85

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROf. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



பொசியுறு தேம்பூஞ் சோலைப் புகலியிற் பிள்ளை யார்க்குச்
சகியொளி முத்தின் பந்தர் தந்தவா நமச்சி வாய.
86

போதக மாகி வந்த புன்மைசே ரசுரன் றன்னை
நோதக வுரித்துப் போர்த்த நுண்ணியா நமச்சி வாய.
87

பௌவத்திற் சிலையோ டாழும் படியமண் செய்ய வப்பர்க்
கெவ்வம தகற்றிப் பேற தீந்தவா நமச்சி வாய.
88

மறுவறு மாதி சைவ மரபிற்சுந் தரர்க்குத் தூதாய்ச்
செறிநிசி பரவை வாயிற் சென்றவா நமச்சி வாய.
89

மான்மழுக் கையி லேந்தி வன்னியோர் பாகம் வைத்தே
ஆன்முது கேறுஞ் சோதி யையனே நமச்சிவாய.
90

மிடற்றினிற் காள கூடவிடத்தினைக் கறுக்க வைத்தாய்
நடத்தினில் விருப்பம் வைத்தாய் நம்பனே நமச்சி வாய.
91

மீனென வந்த மாயன் விழியினை யிடந்து சாத்த
ஆனதோர் மேனி நல்கு மண்ணலே நமச்சி வாய.
92

முன்னமே பிரமன் றன்னை முனிந்து ஓர் தலைய றுத்தாய்
என்னைவந் தாண்டு கொள்வா யீசனே நமச்சி வாய.
93

மூர்க்கனாந் தக்கன் வேள்வி முன்புசென் றழித்து வெற்றி
மார்க்கங்கண் டிட்ட சோதி வானவா நமச்சி வாய.
94

மெலிவிலாத் தவத்தோர் கோப மேலுற முன்னாள் விட்ட
புலிதனை யுரித்துச் சாத்தும் புண்ணியா நமச்சி வாய.
95

மேயபே ருணர்விற் கெட்டா வெளியதா யணுவு மாகி
ஆயசிற் சொரூப மான வண்ணலே நமச்சி வாய.
96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமச்சிவாயமாலை

மையுறு குழலாள் கூடன் மங்கையர்க் கரசி யார்முன்
செய்குறு பணிக்கு வந்த தேவனே நமச்சி வாய. 97

மொழிதரு நால்வர் தங்கள் முநுமறைத் தமிழ்ப்பா மாலை
ஒழிவின்றிச் சூடிக் கொள்ளு மொருவனே நமச்சி வாய. 98

மோகினி வடிவங் கொண்டமுகில்வண்ணன் றன்னைசேர்ந்து
சோகமி லைய னாரைத் தோற்றியோய் நமச்சி வாய. 99

மௌவலங் குழலார் மோக வலையறுத் துயர்சித் தாந்தச்
செவ்வையா முத்தி யென்று சித்திக்கு நமச்சி வாய. 100

நமச்சிவாயமாலை
முற்றும்

---

## நமச்சிவாயப் பத்து

அடியவர் மனத்தைநீங்கா அப்பனே கருணைவாழ்வே
வடிவுடை மழுமானேந்தும் வள்ளலே நமச்சிவாய. 1

ஆக்கையே கோயிலாக வகஞ்சிவ லிங்கமாக
நீக்கமற் றெங்கும்நிற்கும் நிமலனே நமச்சிவாய. 2

இணையடி பணிவார்தம்மை யின்பவீ டடையச்செய்யுந்
துணைவனே சோதிவெற்பே தூயனே நமச்சிவாய. 3

ஈசனே யெம்மைநீங்கா இறைவனே யிமையோர்போற்றும்
வாசமார் கமலபாதா வள்ளலே நமச்சிவாய. 4

உள்குவா ருள்ளத்தெல்லாம் உடனிருந் தறியுந்தேவே
கள்ளுலாங் குழலாள்பாகா கடவுளே நமச்சிவாய. 5

ஊமைபோ லிருந்தேயுண்மை யுணருவார் தங்கட்கெல்லாம்
தாய்மைபோ லருளைச்செய்யுஞ் சங்கரா நமச்சிவாய. 6

எண்ணுவா ரெண்ணந்தோன்று மிடமெனப் பெரியோருன்னைத்
திண்ணமாய்ச் சொல்லும்நல்ல தெய்வமே நமச்சிவாய. 7

ஏகம்ப மேவியந்த ஏந்திழை கலக்கந்தீர்த்த
ஏகனே யெல்லாம்வல்ல எந்தையே நமச்சிவாய. 8

ஐயந்தீர்த் தடியேன்றன்னை யன்றுநல் லூரிலாண்ட
துய்யனே துரியவெற்பே சுந்தரா நமச்சிவாய. 9

ஒன்பதுவாய்த் தோற்பைதன்னில் உயிரடங்கி நிற்கநல்ல
அன்புசெய் தெய்வமேயென் அமுதமே நமச்சிவாய. 10

யோகசுவாமிகள் - நற்சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்



# நமச்சிவாயச் சிறப்புப்பாக்கள்

## திருவைந்தெழுத்து

### தேவாரம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செ ழுத்துமே 1

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிட
ரான கெடுப்பன வஞ்செ ழுத்துமே. 2

தும்ம லிரும றொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை யஞ்செ ழுத்துமே. 3

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத நாம நமச்சி வாயவே. 4

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே. 5

— திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

11622.5.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த பொருணமக் காமென்று சொல்லி மனத்தடைத்துச்
சித்த மொருக்கிச் சிவாய நமவென் றிருக்கினல்லான்
மொய்த்த கதிர்மதி போல்வா ரவர்பா திரிப்புலியூர்
அத்த னருள்பெற லாமோ வறிவிலாப் பேதைநெஞ்சே. 6

ஏது மொன்று மறிவில ராயினும்
ஓதி யஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந் தாமு மகிழ்வர்மாற் பேறரே. 7

இருந்து சொல்லுவன் கேண்மின்க ளேழைகாள்
அருந்த வந்தரு மஞ்செழுத் தோதினாற்
பொருந்து நோய்பிணி போகத்து ரப்பதோர்
மருந்து மாகுவர் மன்னுமாற் பேறரே. 8

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 9

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே. 10

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. 11

— திருநாவுக்கரசு நாயனார்.

அந்தியும் நண்பகலும் அஞ்சுப தஞ்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு ஆரூர்புக்கு
எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே? 12

— சுந்தரமூர்த்தி நாயனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

போற்றியோ நமச்சி வாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய செயசெய போற்றி போற்றி 13

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே 14

— மாணிக்கவாசக சுவாமிகள்

## திருமந்திரம்

தெள்ளமு தூறச் சிவாய நமவென்று
உள்ளமு தூற வொருக்கா லுரைத்திடும்
வெள்ளமு தூறல் விரும்பியுண் ணாதவர்
துள்ளிய நீர்போற் சுழல்கின்ற வாறே 15

குருவழி யாய குணங்களி னின்று
கருவழி யாய கணக்கை யறுக்க
வரும்வழி மான மறுக்கவல் லார்கட்
கருள்வழி காட்டுவ தஞ்செழுத் தாமே. 16

## பெரியபுராணம்

இருவினைப் பாசமு மலக்க லார்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்க ளேறிட
அருளுமெய் யஞ்செழுத் தரசை யிக்கடல்
ஒருகன்மே லேற்றிட லுரைக்க வேண்டுமோ 17

ஆதி மந்திரம் அஞ்செழுத்து ஓதுவார் நோக்கும்
மாதி ரத்தினும் மற்றைமந் திரவிதி வருமே
பூதி சாதனர் மடத்தில்தாம் புனைந்த சாதனைகள்
சாதி யாவகை கண்டமண் குண்டர்கள் தளர்ந்தார். 18

— சேக்கிழார்

## உபதேசகாண்டம்

அஞ்செ ழுத்தெனு மருமறை மந்திர மதனை
நெஞ்ச ழுத்துவர் முழுமுதற் றேவனை நிகர்ப்பார்
பஞ்ச பாதகர் மீதுமற் றவர்நிழற் படினுஞ்
செஞ்செ வேயவர்க் காண்கினும் பவந்தொலை செல்லும் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி யருளுருவம் பெற்றெடுத்த வஞ்செழுத்தை
ஓதி யுணர்ந்தாரை யுள்ளத் துணர்ந்தாலும்
தீது பிறப்பறுப்பா ரன்னவர்க்குத் தீங்கிழைப்பார்
போது நரகினுக்கு மண்ணாத்தல் போகாதே. 20

## திருவிளையாடற் புராணம்

குடைந்துதர்ப் பணமுஞ் செய்து தானமுங்
கொடுத்தும் மாடே
அடைந் தெழுத்தைந்து மெண்ணி யுச்சரித்
தன்பா யெம்மைத்
தொடர்ந்துவந் திறைஞ்சிச் சூழ்ந்து துதித்தெமை
யுவப்பச் செய்தோர்
உடம்பெடுத் ததனா லெந்த வுறுதியுண்
டதனைச் சேர்வார். 21

## வாயுசங்கிதை

பண்ணவ னுருவாம் பஞ்சப் பிரமங்கள் பழுதொன் றில்லா
அண்ணலஞ் செழுத்தின் மன்னி யடைவினி லமரு மந்த
நண்ணுமஞ் செழுத்துக் கூறு நம்பனே வினைக ளெல்லாங்
கண்ணறக் களைந்து மாற்றிக் கனிந்தருள் புரிவ னன்றே. 22
மறையொரு நான்கும் வல்லோர் மாசிலஞ் செழுத்தை வல்லோர்
நெறியிலாப் பதித ரேனு நிகழ்த்துமஞ் செழுத்தை யோதில்
உறைதரு பாவ நீங்க வுயர்கதி சேர்வ ரென்னாக்
கறைமிடற் றிறைவன் றேவி தன்னொடுங் கழறி னானே. 23

## பிரமோத்தரகாண்டம்

முக்க ணாயக னமரருண் முதல்வனா மதுபோல்
தக்க மந்திர மெவற்றினுந் தலைமையைந் தெழுத்தே
தொக்க நான்மறைப் பிரணவ மாதியாத் தொடங்கி
ஒக்க வோதியே பரகதி யளப்பில ருற்றார். 24

## சிவதருமோத்தரம்

அந்தரத் தியங்க வல்ல வசுரரு மணுக மாட்டார்
சிந்திய சித்தக் கொத்தைப் பேய்களுந் தீண்ட மாட்டா
செந்தழ லென்ன வஞ்சித் தீயவா யரவுந் தீண்டா
மந்திர நவிற்று வாரை மறலியு மஞ்சு மன்றே. 25
வினைகளு மஞ்சும் வெய்ய வினைஞரு மஞ்சு வார்கள்
நினைவினி விட்ட மெல்லா மவர்க்கொரு கணத்தி னேரும்
துணையவே சுழன்று போகுந் துட்டசார்த் தூல மற்று
மனிதரு ணல்லா ரேயோ வமரரும் வாஞ்சிப் பாரே. 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



### கடம்பவனபுராணம்

அஞ்செ ழுத்தினு ளோரெழுத் தின்பய னளவைக்
கஞ்ச நாண்மலர்க் கண்ணனுங் கண்ணனுங் காணார்
செஞ்ச வேபிர ணவத்தொடுஞ் சேர்த்தியுச் சரிக்கிற்
பஞ்ச பாதக ராயினும் பரனெனப் படுவார். 27

### நல்வழி

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும். 28

### பட்டினத்தார்பாடல்

அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனாம்
வஞ்சப் புலக்கட்டை வேரற வெட்டி வளங்கள் செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சக் களைபறித் தேன்வளர்த் தேன்சிவ போகத்தையே 29

### சிவவாக்கியர்

நவ்விரண்டு காலதாய் நவின்றமவ் வயிறதாய்
சிவ்விரண்டு தோளதாய்ச் சிறந்தவவ்வு வாயதாய்
யவ்விரண்டு கண்ணதாய் எழுந்துநின்ற நேர்மையின்
செவ்வையொத்து நின்றதே சிவாயம் அஞ் செழுத்துமே. 30

### அருணகிரியந்தாதி

இருந்துநினைப் பார்த மிருவினையை நீக்கும்
பொருந்துமிடி யிம்மையிலே போக்கு - மருந்தன்றோ
தம்பிரா னெவ்வுயிர்க்குந் தாணு வருணகிரி
எம்பிரா னோரஞ் செழுத்து. 31

### திருக்கருவைக்கலித்துறையந்தாதி

கருத்துறு மாயை யிருளுக்குத் தீபங் கழிபிறவிப்
பெருத்தெழு நோவுக் கமிர்தசஞ் சீவினி பேதித் துள்ளம்
வருத்திடு துன்பத் திரைவாரி திக்கு வடவைமன்றத்
தருத்தியி னாடுங் கருவைப் பிரான்றிரு வஞ்செழுத்தே. 32

### தாயுமானவர்பாடல்

அஞ்செழுத்தி னுண்மை யதுவான வப்பொருளை
நெஞ்சழுத்தி யொன்றாகி நிற்குநா ளெந்நாளோ. 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பு. மந்திரம் - மந் - அந்தப் பொருளை நினைக்கிறவனை, த்ரம்-காக்கின்றது.

1. மால் - விண்டு, அமரர் - நீடித்த ஆயுளுள்ளவர், முறைமுறை - பலதடவை.

2. வேத நான்கு - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்.

3. இணை - இரண்டு, ஏழுலகு - பூலோகம், புவர்லோகம், சுவர் லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்திய லோகம். மாயன் - விண்டு, கணை - அம்பு, எயில் - மதில், எய்த - செலுத்தின (விட்ட),

4. ஈட்டிய - சேர்த்த, வாட்டிய - போக்கின.

5. உம்பர்கள்-மேலுலகர்(தேவர்)-அண்ணல்-ஆடவரிற் சிறந்தவன்.

6. தாணு - சிவன்

7. எழுபிறப்பு - தேவர், மனிதன், விலங்கு,புள், ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம்; மாழ்கும் - மயங்கும்.

8. ஏடு - இதழ் (மலர்), நீடுதல் - நாள்மிகல், நிமலன் - மல மில்லாதவன்.

9. ஐயம் - பிச்சை. பாதம் - திருவடி.

10. ஒன்பது வாயில்-ஒன்பது வழிகள்,(காது 2.மூக்குத் தொளை 2. கண் குழி 2. வாய் 1.மலவழி 1.நீர்வழி 1). கூடு-உடம்பு, உய்யும் வண்ணம் - பிழைக்கும் விதம், பொதி - நிறைதல், தாள் - கால், புனிதன் - தூயன்.

11. வாமன் - அழகன், நல்கும் - கொடுக்கின்ற,

12. ஔவியம் - பொறாமை, திவ்வியம்-திப்பியம்,(உயர்வு)

13. அக்கு - உருத்திராக்கம்,பூண்டுகொண்டு-அணிந்து கொண்டு.

14. கம்பம் - கட்டுத்தறி, களிறு - யானை.

15. உழன்று - வருந்தி, உணவு - உண்டி, பகரொணா - (பகர ஒணா) சொல்ல முடியாத, இன்னல் - துன்பம்.

16. சகம் - உலகம், முத்தி - வீடு, அளிப்பாய் - கொடுப்பாய்.

17. ஞமன் - இயமன், ஆரணன் - பிரமன், சமன் - ஒப்பு

18. இடவிய - அகன்ற (மிக்க இடமுள்ள), ஏந்தி - தாங்கி.

19. இருவர் - பிரமன், விண்டு; வானவா - உயர்ந்தவனே.

20. தண் - குளிர்ந்த, தமிழ்முனிவன் - அகத்தியன், ஏவும் -செலுத்தும், அண்டர் - தேவர்கள், அயன் - பிரமன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. நதி - கங்கையாறு, மதி - திங்கள், கொஞ்சு - மழலைப் பேச்சு பேசுகின்ற.
22. பண்டு - முற்காலம், பங்கயம் - தாமரை.
23. மங்கை - உமை, மழு - கோடரி.
24. வியக்க - பாராட்ட.
25. பரவுவார் - துதிப்பவர்.
26. இலவு-இலவமலர்,இதழ் - வாயிதழ், ஏவலுக்கு - வேலைக்கு, அலமரல் - வருந்துதல்.
27. மதிக்கீற்று - மூன்றாம்பிறை.
28. முருகன் - இளைஞன், ஈந்த - திருவருள் செய்த (கொடுத்த).
29. மூப்பு - கிழத்தன்மை, மோனம் - சும்மா விருத்தல்.
30. அறவன் - அறக்கடவுள்.
31. அனந்தல் - தூக்கம், இனம் - குலம்.
32. கரி - யானை, உரி - தோல், போர்த்து - மூடி, ஏந்தி - தாங்கி திரிபுரம் - முப்புரம், தகனம் செய்த - எரித்த.
33. காலன் - இயமன், பாலன் - சீராளன்.
34. மொழி - சொல், கௌரி - உமை, ஒளி - குளிர்ந்த வெளிச்சம் ஒருவன் - ஒப்பில்லாதவன்.
35. கீண்டு - பிளந்து, வெற்பு-மலை, மாண்டு-இறந்து, உக-சிந்த, ஊன்றும் - அழுத்தின.
36. குழை - காது, குமிழ் - குமிழம்பூ, கோதை - உமை, பிழை - குற்றம், மதன் - காமன்.
37. கூவிளம் - வில்வம், அறுகு-அறுகம்புல், மேவிய-பொருந்தின,
38. அங்கணர் - அழகிய நெற்றிக்கண்ணனே.
39. கேசவன் - விண்டு, கேழ் - செந்நிறம், கஞ்சம் - தாமரை ஆசி - வாழ்த்து, ஆழி - சக்கரம்.
40. சிலை - வில், கரியமால் - கறுப்புநிறமுள்ள திருமால், பகழி - அம்பு, உச்சிதம் - உயர்வு. புவி - பூமி.
41. கொற்றவன் - அரிமர்த்தன பாண்டி வேந்தன், துகில்-துணி, கோல் - கைக்கோல்.
42. கோணமாமலை - திருக்கோணமலை, கோது - குற்றம்.
43. இமையோர் - தேவர்கள், (கண்ணிமையாதவர்)
44. சாந்து - சந்தனம், தண்புனல் - தண்தூர் (கங்கை), ஏந்து - தாங்குகின்ற.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. சிரம் - பிரமன் தலையோடு, சீரிய - உயர்ந்த, விரகு-அறிவு மேருவில்லி-மேருமலையை வில்லாக உடையவன் (சிவன்)

46. சீதளம் - குளிர்ந்த, கமலம் - தாமரை, வாவி - குளம், சாதனம் - ஓலை.

47. சுத்தம் - தூய்மையான, சுடலையில் - சுடுகாட்டில், நடனம்ஆடும் - கூத்தாடின.

48. வெள்ளிவெற்பு - கைலாயமலை, ஆரிய - மேலானவரே தாணுவே - நிலையானவரே.

49. தஞ்சம் - அடைக்கலம்.

50. சேதனம் - இயங்குதல், வாதவூர் அரசு - மாணிக்கவாசக சுவாமிகள், வரதன் - கேட்டவற்றையளிப்பவன்.

51. ஐம்புலன்கள் - ஊறு, சுவை, ஒளி, ஓசை, நாற்றம். கைவரம் - கைகூடுவரம்,

52, சொரி - சிந்துகின்ற, விரி - படர்கின்ற.

53. ஆலவாய் - மதுரை, சமண்-அமணர்கள், மாய்க்க - கொல்ல பாலறாவாயினார் - திருஞானசம்பந்தர், பரிந்து - விரும்பி.

55. தாது - தேன், அவிழ் - சிந்துகின்ற.

56. தென்னவன் - அரிமர்த்தன பாண்டியன், பரி - குதிரை.

57. தீது - குற்றம், உளம் - மனம்.

58. துன்பு - வருத்தம், பணை - பருத்த

59. அசலம் - மலை,

61. நாடி - ஆராய்ந்து.

62. தையல் - உமை.

63. தொல் - பழமை, பாணி - கையுடையவன், வாங்கும் - வளைத்த,

64. ஆத்தன் - பெரியோன், அளியன் - அன்பன்.

65. நஞ்சு - விடம், அருந்தி - உண்டு, நாண - வெட்கமடைய.

66. ஆரணம் - மறை.

67. கற்பனை - கட்டளை (அளவு):

69. நுண் இடை - மென்மையான இடை, நுதல் - நெற்றி.

70. நுவல் - சொல்லுதல், மாபுரம் - திரிபுரம்.

71. நெஞ்சகம் மலர் - மனோதாமரை, அஞ்சல் - பயப்படாதே.

72. நேத்திரம் - கண், வேள் - மன்மதன்.

73. நைந்து-இளகி, பைந்தொடி - பசுமையாகிய வளையலணிந்த உமை. (அன்மொழித்தொகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. நொந்தவர் - வருந்தினவர், நொடி - காலவிரைவு, கந்தரம்-கழுத்து.
75. நோக்கம் - கண், துரியாதீதம் - இறந்தஇடம்.
76. நௌவி - மான், நயம் - அன்பு.
77. பணிவார் - வணங்குவோர், பதம் - திருவடி.
80. பீடு - பெருமை, பெருவினை - தீவினை.
81. புகல் - சொல்லுதல், எறி - அடித்த, தகவு - சால்பு.
82. பொங்க - விளங்க, பொருவு இலா - ஒப்பில்லாத , அம்மை-காரைக்காலம்மையார், நேசம்-அன்பு, நிருத்தம்-கூத்து.
83 அனையார் - ஒத்தவர்கள், நாணும் - வெட்கப்படுகின்ற, பெட்பு - ஆசை, வளை - வளையல், தூசு - துணி, பலி-ஐயம்.
85 பை - பை, அரா - பாம்பு, அணை - பீடம், பார் அளந்தோன் - திருமால், மெய் - உடம்பு, அளித்து - கொடுத்து.
86. பொசியுறு - சிந்துகின்ற, தேம் - தேன், புகலியிற் பிள்ளையார் - திருஞானசம்பந்தர், சசி - திங்கள், தந்தவா - கொடுத்தவனே.
87. போதகம் - யானை, புன்மை - அற்பத் தொழில், நோதக -வருந்தும்படி.
88. பௌவம் - கடல், சிலை - கல், ஆழும்படி - அழுந்தும் வண்ணம், எவ்வம் - துன்பம், அகற்றி - நீக்கி.
89. மறு - குற்றம், செறி நிசி - மிக்க இருள், பரவை - பரவை நாய்ச்சியார்.
90. வன்னி - கொடிபோலும் உமை, ஓர் பாகம் - ஒரு பக்கம், ஆன் - எருது.
91. மிடறு - கழுத்து, காளகூடவிடம் - ஆலாலம், நடம் - கூத்து.
92. மீன் - மச்சாவதாரம், விழி - கண், இடந்து - பேர்த்து, நல்கும் - கொடுத்த.
94. மூர்க்கன் - கொடியன், வேள்வி - யாகம்.
95. மெலிவு - அயர்ச்சி, சாத்தும் - தரித்துக்கொண்ட.
96. மேய - பொருந்தின, பேர் உணர்வு - பேரறிவு, சிற்சொரூபம் - ஞானவடிவம்.
97. மை - கறுப்பு, கூடல் - மதுரை.
98. ஒழிவு இன்றி - எக்காலமும், சூடிக்கொள்ளும் - தரித்துக் கொள்கின்ற.
99. முகில்வண்ணன்-மேகநிறத்தன்(திருமால்), சோகம்-மயக்கம்.
100. மௌவல் - முல்லை. குழலார் - கூந்தலையுடைய பெண்கள், செவ்வையாம் - உயர்ந்த, சித்திக்கும் - கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# குரு நமச்சிவாய தேவர் வரலாறு

நினைக்க வீடுபேறளிக்கும் சிவப்பதியாகிய திருவண்ணாமலையிலே நமசிவாய மூர்த்தி எனும் சித்தர் ஒருவர் எழுந்தருளியிருந்தார். அவர் மலைக்குகையில் நிட்டையிலிருந்தமையால் குகைநமசிவாயர் என அழைக்கப்பட்டார். அவர் குகையின் அண்மையில் வளர்ந்தோங்கி நின்ற ஆலமரத்தில் தூங்கும் ஊஞ்சலிட்டு அதில் அறிதுயில் கொள்வது வழக்கம்.

குகைநமசிவாயருக்கு நமச்சிவாய மூர்த்தி எனும் சீடர் ஒருவர் இருந்தார். அவர் தமது குருவோடு உடனுறைந்து மிக்க அன்போடு பணிபுரிந்து வந்தார். அவ்வாறு பணிபுரிந்து வரும் நாளில் ஒருநாள் திடீரென்று நகைத்தார். சீடர் நகைபுரிவதைக் கண்ட குருநாதர் ''அப்பா நமசிவாயம், என்ன புதுமையைக் கண்டு நகைத்தாய்?'' என வினவினார். அதற்குச் சீடர்'' என்னை அடிமைகொண்ட ஐயனே! திருவாரூரிலே தியாகராசர் திருவுலாக் கொண்டருளும்போது தெருவில் கூத்தியற்றிய ஒரு கூத்தி கால் தடக்கிக் கீழே வீழ்ந்தாள். அவள் வீழ்ந்து கிடந்த கிடையைக் கண்டு அங்கு நின்றோரனைவரும் நகைத்தனர்; நானும் நகைத்தேன்'' என்றார். இன்னோர் நாள் நமச்சிவாயர் தமது ஆடையைப் பிடித்துத் தேய்த்தார். குகை நமசிவாயர் மாணாக்கரைப் பார்த்து 'ஏன் இப்படித் தேய்த்தாய்?' எனக் கேட்டார். மாணாக்கர் 'தில்லைப் பொன்னம்பலத்துத் திரைஒரு எலியிழுத்த கொத்துவிளக்குத்திரிப் பிடித்து எரியத் தொடங்கியது. அந்தணர்கள் திரையைத் தேய்த்துத் தீயை அணைத்தனர்; அடியேனும் தேய்த்து மேலும் எரியாவண்ணம் செய்தேன்'' எனப் பதிலுரைத்தார். மற்றொரு நாள் குருநாதர் சீடரைச் சோதிக்கும் பொருட்டு வாந்திசெய்து அதைத் திருவோட்டிற்பிடித்துச் சீடரிடம் கொடுத்து 'இதனைக் கொண்டு போய் மனிதர் காலடிபடாத இடத்திற் கொட்டிவிட்டு வா'' எனக் கூறினார். நமச்சிவாயர், மனிதர் காலடிபடாத இடம் எது என ஆராய்ந்து அதனைத் தாமே சாப்பிட்டு விட்டு வந்தார். வந்த சீடரிடம் ''அடிபடாத இடத்தில் வைத்தாயா?'' எனக் குருநாதர் கேட்டார். சீடர் 'வைக்கவேண்டிய இடத்தில் வைத்தேன்' எனப் பதில் கூறினார். நமச்சிவாயரின் பக்குவமுதிர்ச்சியைத் தெரிந்துகொண்ட தேசிகர், அவரைத் தம்மிடமிருந்து தனித்து அனுப்புவதற்கு முன்னர் மற்றுமொரு சோதனைக்குட்படுத்தினார். ஒருநாள்

''ஆல்ப்பழுத்துப் பட்சியினுக் காகார மானதென
வேல்பழுத்து நின்றநிலை வீணிலென-

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



எனும் ஒரு வெண்பாவிற் பாதியைப்பாடினார். நமச்சிவாயர், எஞ்சியதையும் குருநாதர் பாடுவார் என எதிர்பார்த்தார். குகைநமசிவாயரோ ''எஞ்சியதை நீயே பாடி முடி'' எனக் கூறினார். மாணாக்கர் ''நான் குருவாக்கிற்கு எதிர்வாக்குச் சொல்லக் கூடாது'' எனக்கூறித் தயங்கிநின்றார். ''நீ ஞானப்பிள்ளையாகையாற் சொல்லலாம்'' எனத் தேசிகர் கூறியதும்,

- சாலவனச்

செய்யா ஒருத்தருடன் சேர்ந்தும் இருப்பீரோ
ஐயா நமச்சிவாயா'' எனப்பாடி முடித்தார்.

இதனைக் கேட்ட குகைநமசிவாயர் தாம் அறிதுயில் கொள்ளும் படுக்கை விட்டிறங்கி ''அப்பா! என்னிரு கண்மணியே!! இன்றல்லோ நீ மெய்யறிவடைந்தாய். இன்றுமுதல் உன்பெயர் குருநமச்சிவாயர் என்று வழங்குக'' என்று கூறித் தழுவிக் கொண்டார். பின்னர் ''ஒரு தூணில் இரண்டு யானைகளைக் கட்டுதல் கூடாது. இதுவோ போகத்தை அளிக்கும் சிவப்பதி. அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ் ஞானத்தைத் தரும் அம்பலவாணர் எழுந்தருளியிருக்கும் மேலான சிவப்பதி திருத்தில்லை. நீ தில்லைக்குச் செல். தில்லையில் உன்னாலாகவேண்டிய திருப்பணிகள் பல உள்ளன'' எனக் கூறினார். குருநமச்சிவாயர் தம்குருபரனைக் கும்பிட்டு வாழும் பாக்கியத்தை இழந்து போவதை நினைந்து பெரிதும் துயருற்றார். அவர் ''சுவாமி, அடியேன் குருதரிசனமின்றி இருக்கமாட்டேன்'' எனக்கூறினார். குருபரன், ''நீ திருத்தில்லை போய் அங்கு தங்கியிரு. கூத்தப்பிரான் என்போல் காட்சியளிக்கவில்லையானால் இவ்விடத்திற்கு வந்துவிடு'' என உறுதிமொழி கூறினார். குருநமச்சிவாயர் சம்மதமுடையவராய்

'வாக்காலே தியானத்தாலே மனமகிழ் கிருபையாலே
நோக்காலே பரிசத்தாலே நுண்ணிய பிறவி தீர்க்கும்
தாக்கான நமசிவாயம் சலக்கமெய் யாடுகின்ற
நாற்காலி காலதானால் நான்முத்தி பெறலுமாமே'

முதலிய பத்துப் பாடல்களால் குருபரனைத் தோத்திரஞ் செய்து வணங்கினார். 'நடக்கலாம்' எனத் தேசிகர் விடையீந்ததும் குருநமசிவாயர் தான் மட்டும் தனித்தவராய் கிழக்கு நோக்கி வழி நடந்தார். இரவாகியதும் ஒரு மரத்தின் கீழ் நிட்டை கூடியிருந்தார். நிட்டை நீங்கியதும் பசிமிகுதலை எண்ணி உண்ணாமுலையம்மையை நினைந்து

''அண்ணா மலையார் அகத்துக் கினியாளே
உண்ணா முலையே உமையாளே - நண்ணா
நினைதோறும் போற்றிசெய் நின்னடியா ருண்ண
மனைதோறுஞ் சோறுகொண்டு வா'' எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பாவைப் பாடினார். அன்று பூசகர் அண்ணாமலையாருக்குச் சருக்கரைப் பொங்கல் செய்து பொற்றாம்பாளத்தில் வைத்துப் படைத்தனர். அவர் அதனை எடுப்பதற்கு மறந்தவராய் கோயிலைப் பூட்டிக் கொண்டு அவரது இருப்பிடம் சென்றார். உண்ணாமுலையம்மையார் அப்பொற்றாம்பாளத்தைப் பொங்கலோடு எடுத்து வந்து குருநமச்சிவாயருக்குக் கொடுத்துவிட்டுச் சென்றார். மறுநாள் காலையில் கோயிலுக்கு வந்த பூசகர் கதவைத் திறந்து பார்த்துப் பொற்றாம்பாளத்தைக் காணாது வியப்படைந்தார். பொற்றாம்பாளம் களவாடப்பட்டுவிட்டதென்று பலரும் நினைத்தனர். தாம்பாளத்தைத்தேடி எல்லோரும் மனங்கவன்று சுழன்றதில் இருபது நாழிகைவரை கோவிலிற் பூசை நடைபெறவில்லை. அப்போது ஆவேசமுற்ற அந்தணச் சிறுவனொருவன், 'குருநமசிவாய மூர்த்தி திருத்தில்லைக்குப் போகிற வழியில் ஓர் ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருக்கிறார். அவருக்கு உண்ணாமுலையம்மையார் அமுது கொண்டு போய்க் கொடுத்தார். தாம்பாளம் அங்கே கிடக்கின்றது. எடுத்துக் கொண்டு வாருங்கள்' என இயம்பினான். பூசகர் முதலியோர் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று தாம்பாளத்தை எடுத்து வந்தனர்.

மறுநாள் காலை குருநமச்சிவாயர் எழுந்து குருவை நினைந்த சிந்தையராய் வழிபட்டுக் கிழக்கு நோக்கிப் புறப்பட்டார். வழியிலே இருடிவந்தனம் எனும் சிறந்த திருத்தலத்தைக் கண்டார். இத்தலத்திலே அம்மையும், சுவாமியும் பாகம் பிரியாமலிருப்பர். அவ்வம்மையப்ப மூர்த்தம் முனிவர்கட்கரசராகிய அகத்தியரால் பூசிக்கப்பட்டது. அத்திருப்பதியில் ஐயாயிரங்கொண்டான் எனும் தீர்த்தமும் உண்டு. அத்தீர்த்த நீரில் நீராடி அநுட்டானங்களை முடித்துக் கொண்டுநிட்டையிலமர்ந்தார். வேளையாகியதும் பசிநோய் அணுகியது. அப்போது

''தாயிருக்கப் பிள்ளை தளருமோ தாரணியில்
நீயிருக்க நான்தளர்தல் நீதியோ - வேயிருக்கும்
தோளியே விண்ணோர் துதிக்குந் திருமுத்து
வாணியே சோறு கொண்டு வா'' என்று பாடினார்.

பாடியதும் அம்பிகை தோன்றி நான் பாகம் பிரியாமலிருக்கவும் நீ பிரித்துப் பாடியதும் சரியோ? என்றருளினார். குரு நமச்சிவாயர்.

''மின்னும் படிவந்த மேவுகலதீசருடன்
மன்னுந் திருமுத்து வாணியே - பொன்னின்
கலையாளே தாயேயென் கன்மனத்தே நின்ற
மலையாளே சோறுகொண்டு வா.'' என்று

ஈசனுடன் உடனாய் இருப்பதைப்பாட அம்மையார் அமுதளித்தனர். அம்மையீந்த அமுதருந்திப் பசிநீங்கியதும், அப்பதியினின்றும் புறப்பட்டார். விருத்தாசலம் என இந்நாளில் வழங்கும் பழமலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்து மணிமுத்த நதியில் நீராடினார். பழமலை நாதரையும் பெரிய நாயகியம்மையாரையும் போற்றி வழிபட்டார். பெரிய நாயகியம்மையை

''நன்றிபுனை யும்பெரிய நாயகியெ னுங்கிழத்தி
என்றுஞ் சிவன்பால் இடக்கிழத்தி - நின்ற
நிலக்கிழத்தி மேனி முழுநீலக் கிழத்தி
மலைக்கிழத்தி.........'' என்றவாறு பாட அம்பிகை

தண்டூன்றி விருத்தாம்பிகையாக வந்து தோன்றினார். குருநமச்சிவாயரை நோக்கி 'என்னைக் கிழத்தி என்று பாடுதல் நலமோ' என வினவினார். குருநமச்சிவாயர் 'அம்மையே! நீர் பாலகாசியிற் பாலாம்பிகை. இது விருத்தகாசி. உம்முடைய சுவாமி பழமலை நாதர். நீரும் பெரியநாயகி. ஆகையால் நான் இவ்வாறு பாடினேன்.'' எனக்கூறிப் பின் அம்மைகேட்டுக் கொண்ட வண்ணம் பாலாம்பிகையாகவும் பாடி வழிபட்டார்.

பின்னர் பழமலையினின்றும் புறப்பட்டுப் புவனகிரியை அடைந்தார். தில்லைக்கோபுரங்கள் நான்கும் தெரிந்தன. அவைகளைப் போற்றிப் பணிந்தார்.

'கோபுரங்கள் நான்கினையும் கண்டமட்டில் குற்ற மெல்லாம்
தீபரந்த பஞ்சதுபோல் சென்றதே - நூபுரங்கள்
ஆர்க்கின்ற செஞ்சரண அம்பலவா நின்பாதம்
பார்க்கின்றார்க் கென்னோ பலன்'

எனப் பாடிய வண்ணம் திருத்தில்லையை அடைந்தார். தில்லைச் சிவகங்கையில் தீர்த்தமாடினார்.

'கண்டமட்டில் கண்டவினை காதம்போம் கையிலள்ளிக்
கொண்டமட்டில் கொண்டவினை கொள்ளைபோம் - வண்டமிழ்சேர்
வாயார வேபுகழும் வண்ணச் சிவகாமித்
தாயார் திருமஞ் சனம்' எனத் தீர்த்தத்தைப் பாடிப்பரவி

ஆராக்காதலுடன் பொன்னம்பலத்துட் புகுந்து கூத்தப் பிரானைத் தரிசித்தார். கூத்தப்பிரான் அண்ணாமலையிலிருக்கும் குகைநமசிவாயர் கோலத்தில் திகழ்வதைக் கண்டு களிகூர்ந்தார்.

'திருவண்ணா மலையிற் குகை நமசிவாய
தேசிகவடிவ மாயிருந்து
கரவனா மடியேன் சென்னிமேலுனது
கழலிணை வைத்தவா றுணரேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரகநா ரியரைப் புதல்வரைப் பொருளை
வேண்டிய வேண்டிய தனைத்தும்
பரவினார் புகழ்வார்க் களித்திடும் பொன்னம்
பலவனே பரம ராசியனே' எனத் தொடங்கி நூறுபாடல்

களை ஒரு நாழிகை நேரத்தில் நின்ற படியே பாடினார். (இந்நூல் பரமராசியமாலை எனும் பெயருடன் வழங்குகிறது) பின்னர் ஓர் அறைக்குட் சென்று நிட்டையிலிருந்தார். அப்பொழுது தில்லையம்பலவாணர் தில்லைவாழந்தணர்களில் மிகச் சிறந்தோராயிருந்த சிவமுத்தர், சடாமுத்தர், மகாமுத்தர் எனும் மூவருக்கும் காட்சி கொடுத்து 'திருவண்ணாமலையிலிருந்து ஒரு பெரிய துறவி இங்கு வந்துள்ளார். அவர் நீண்டநேரம் யோகநிட்டையிலிருப்பவர். ஆதலால் அவரை ஓர் அமைதியான தனியிடத்தில் அமர்த்துதல் வேண்டும். அதற்குத் தகுந்த இடம் கோயிலின் வடபுற எல்லை. அவ்விடத்தில் மாணிக்கவாசகருடைய திருவாசகத்தை எழுதுவதற்காகவும், உபமன்னிய முனிவருக்குப் பாற்கடலை அழைத்தற்காகவும் இருமுறை அடிவைத்துள்ளோம். அவ்விடத்தில் அவரை அமரச் செய்யுங்கள். அவரால் நமக்குப் பல திருப்பணிகள் நிகழ உள்ளன.'' எனக்கூறி மறைந்தருளினார். அவ்வாறே அவ்வந்தணர் மூவரும் குருநமச்சிவாயரை அழைத்துச் சென்று குறித்த இடத்தில் அமரச் செய்தனர். குருநமச்சிவாயர் அவ்விடத்தில் நிட்டைகூடியிருந்தார். நிட்டைகலைந்து பசியுணர்வு தோன்றியதும்,

"ஊன்பயிலுங் காயம் உலராமல் உன்றனது
வான்பயிலும் பொன்னடியை வாழ்த்துவேன் -
தேன்பயிலும்
சொல்லியல் நல்லார் துதிக்கும் சிவகாம
வல்லியே சோறுகொண்டு வா''

எனப்பாடினர். அப்போது சிவகாமியம்மையார் அமுதுகொண்டு வந்து

"கொண்டுவந்தேன் சோறு குகைநமச்சி வாயரது
தொண்ட ரடியார் சுகிக்கவே - பண்டுகந்த
பேய்ச்சிமுலை யுண்ட பெருமா னுடன்பிறந்த
நாய்ச்சி சிவகாமி நான்'' என்று திருவாய்மலர்ந்தருளியது

டன் நாடோறும் அமுதளித்தனர். நமச்சிவாயர் கலக்கமெதுவுமின்றி நிட்டைபொருந்தியிருந்தார்.

குருநமச்சிவாயர் ஒரு மெய்ஞ்ஞானி என்பதை அறிந்து பலரும் அவரைத் தரிசித்து வரலாயினர். அவரைத் தரிசிக்கச் சென்றோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் முன்னிலையிலே காணிக்கையிட்டு வந்தனர். அக்காணிக்கைச் செல்வம் பெருந்தொகையாய்ப் பெருகலாயிற்று. குருநமச்சிவாயரோ பொருட்செல்வத்தை ஆட்கொல்லியாகக் கருதுபவர். ஆதலால் நிட்டைகலைந்து புறநோக்கு நோக்கும் போது கண்ணிற்பட்டோரிடம் அச்செல்வத்தை எடுத்துச் செல்லுமாறு கூறுவார்.

இவ்வாறு பெருந்தொகைச் செல்வம் வீணாவதை அறிந்த தில்லைவாழந்தணர்கள் குருநமச்சிவாயரிடம் சென்று கோயிலுள் வந்து அமருமாறும், செல்வத்தைக் கொண்டு திருப்பணிகள் செய்யலாமெனவும், அறக்கட்டளைகள் நிறுவலாமெனவும் கூறினர். ஆனால் அவரோ ''நாம் அம்பலவாணர் ஆணைப்படி இங்கிருக்கிறோம்; அங்கு நமக்கென்னவேலை'' என்று கூறி மறுத்துவிட்டார். அந்தணர்கள் தாம் அழைத்தால் வாராரென்றும் சுவாமியைக் கொண்டு அழைப்பித்தால் வருவாரென்றும் துணிந்து நடராசப்பெருமான் முன்னிலையில் நின்று வேண்டுதல் செய்தனர். பெருமான் அவர்கள் வேண்டுதலுக்கு இரங்கினர். முதிய ஓர் துறவுக்கோலத்துடன் தண்டூன்றிக் கமண்டலம் ஏந்திய கையராய் குருநமச்சிவாயரிடம் சென்றனர். குருநமச்சிவாயர் துறவிக்கு மதிப்புச் செய்து ஊர், பெயர் முதலியவற்றை விசாரித்தார். துறவியாய் வந்த கூத்தப்பிரான் தமது ஊர் தில்லைவனம் என்றும், பெயர் அம்பலத்தாடுவார் என்றும், ஊரெங்கும் திரிந்தும் உணவு கிடையாமையால் அவ்விடம் வந்ததாகவும் கூறினார். குருநமச்சிவாயர் நகைசெய்து ''நமக்குத் தேவியே உணவளிப்பது. நம்மிடம் உண்ணும் பாத்திரம் கூட இல்லையே', எனக்கூறினர். துறவி தலையிற் கையை வைத்துத் திங்களையே பாத்திரமாகத் தாங்கி ''இதோ பாத்திரமிருக்கிற''தென அருளினார். குருநமச்சிவாயர் சிவகாமியம்மையைச் சிந்தை செய்தார்; பாத்திரம் நிறைந்தது; அமுது செய்யுமாறு வேண்டினார். ஆனால் துறவியோ நாடோறும் உணவளிப்பதற்குச் சம்மதித்தாலேயே அமுதுசெய்வதாகக் கூறினார். எப்போதும் தமது முன்னிலையிலிருந்தால் அவ்வாறு செய்யலாம் எனக் கூறி அமுது செய்யுமாறு வேண்டினார்: திருநீற்றையும், சிவகண்மணியையும் தொட்டுக்கொடுத்து அமுதினைத் துறவி அமுது செய்தார். அமுதுசெய்து முடிந்ததும், அருகேயிருந்த திருப்பாற்கடலில் நீர் பருகச் செல்வான்போற் சென்று அங்கே மறைந்தருளினார். அன்று தில்லைவாழந்தணரிடம் ''அனைவருமாக நமது சிவிகையையும், நமக்கான விருதுகளையும் கொண்டு சென்று குருநமச்சிவாயரை வீதியுலாவாக அழைத்து வாருங்கள்'' எனப்பணித்தார். அவ்வாறே அந்தணரனைவரும் ஒன்று திரண்டு சென்று ''இனிமேலாவது எழுந்தருளலாமே; இந்தப்பல்லக்கில் ஏற வேண்டும்'' எனவேண்டினர். அம்பலத்தாடுவாரின் அருளாடலை நினைந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சங்கரமாய் அம்பலவர் தாமே எழுந்தருளி
இங்கெமக்குப் பிச்சை இடுவென்ன - அங்கமுது
திட்டமுடன் நமக்குத் தினமுமே நீசர்வ
கட்டளையுண் டாக்கென்றார் காண்''

எனப் போற்றிப் பல்லக்கிலேறித் திருவீதி வலமாகச் சென்றார்.

''அல்லலாகிய இருவினை தனையறுத்
தடியிணை தருவாரோ
மல்லல்நீடிய புவியின்மேல் இன்னமும்
வருபிறப் பறுப்பாரோ
நல்லமாமுலை மாதுமை நாயகர்
நான்நிதம் நவின்றேத்தும்
தில்லைநாயகர் அம்பலத் தாடுவார்
திருவுளந் தெரியாதே''

எனப் பாடியவாறே கோயிலுட் சென்று கொடிமரத்தருகே பல்லக்கை விட்டிறங்கினார். பஞ்சாக்கரப்படி வரைக்கும் பாதக்குறடு அணிந்து சென்றார்; பொன்னம்பலத்திற் புகுந்து கூத்தப்பிரானைப் போற்றி வழிபட்டார். வழிபாடாற்றி முடிந்ததும், தில்லைவாழந்தணர்களை நோக்கி ''நாம் இப்பொழுது என்ன கட்டளையை ஏற்படுத்தலாம்'' எனச் சிந்தை செய்தார். அப்பொழுது ''சர்வசனத்துக்கும் சர்வ கட்டளை'' என்ற உருவிலி வாக்கு ஒலித்தது. அப்பொழுது அனைவரும் பார்த்திருக்க அம்பலவாணர் பிச்சை கொடுத்தால் எப்போதும் கட்டளை நடக்குமென எண்ணிப் பொற்றாம்பாளத்தை ஏந்தி

''காதலுடன் சர்வ கட்டளையா யுன்னுடைய
பாதமலர்ப் பூசை பண்ணவே - ஓது
குருவா யெனையாண்டு கொண்டவனே பிச்சை
தருவாய் சிதம்பரநா தா''

எனப் பாடினார். ஆடல் வல்லான் அருளால் தங்கக்காசு ஒன்று விழுந்தது. இவ்வருளைக் கண்டு உருகிய அனைவரும் வராகன், ரூபாய், பணம், காசு ஆகியவைகளை ஏராளமாயிட்டனர். சேர்ந்த பொருளைத் தில்லை மூவாயிரவரிடம் கொடுத்துக் குருநமச்சிவாயர் சிறிது தூரம் சென்றார். சற்றுத்தடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுண்டாயிற்று. தடையின் காரணத்தை நிட்டையிற் கண்டுணர்ந்த குருநமச்சிவாயர் தில்லைவாழந்தணரை நோக்கி ''சுவாமிக்கு அணிகலன்கள் இருந்ததுண்டா'' என வினவினார். அந்தணர்கள் ஆராய்ந்து பார்த்து ''பதஞ்சலி முனிவருக்கும் வியாக்கிரபாத முனிவருக்கும் திருக்கூத்தியற்றிய பொழுது பாதச் சிலம்பும் கிண்கிணியும் இருந்தன'' எனக் கூறினர். குருநமச்சிவாயர் சிற்பாசாரியரை அழைப்பித்து பாதச் சிலம்பு, கிண்கிணி, வீரகண்டாமணி என்பனவற்றைச் செய்தற்கு வேண்டும் பொருளைச் சேர்ந்த பொருளினின்றும் கொடுத்தார். இச்செயல் தில்லைவாழந்தணர்க்குத் திருப்தி தரவில்லை. அவர்கள் ஒன்றுகூடிக் காலணியணிந்து கொண்டால் கூத்தியற்ற வேண்டுமே. சுவாமி இவருக்காகக் கூத்தியற்றுவரோ? என ஏழனஞ் செய்தனர். இச்சொற்கள் தமது அறையிலிருந்த குருநமச்சிவாயரது செவியிலும் விழுந்தன. நாற்பதாம்நாள் அணிகலன்கள் வந்து சேர்ந்தன. குருநமச்சிவாயர் அந்தணர்களை அழைத்து ''அம்பலவாணர் கூத்தியற்றினால் நீங்கள் அனைவரும் பார்ப்பீர்களோ'' என உசாவினார். அவர்கள் ஆடல் காண்பது தமது பாக்கியமே என்றும், அதனால் தமது மூவேழ் தலைமுறையும் ஈடேற்றமடையும் என்றும் கூறி ஆடல்காண அருள்புரியுமாறு வேண்டினர். ''ஒருவேளை காற்றுவந்து அசைந்தார் என்று சொல்லவுங் கூடும்; ஆதலால் பலகணிகளை நன்றாகச் சாத்திவிடுங்கள்'' எனக்கூறிக் கூத்தப்பெருமானின் திருவடி மலர்களில் அணிகலன்களை அணியச் செய்தார். பின்னர் ஆடல் காணும் பெருவிருப்பினராய்

'அம்பலவா ஒருக்கால் ஆடினால் தாழ்வாமோ
உம்பரெலாங் கண்டதெனக் கொப்பாமோ-சம்புவே
வெற்றிப் பதஞ்சலிக்கும் வெம்புலிக்கும் தித்தியென
ஒத்துப் பதஞ்சலிக்கு மோ'

என்று பாடினார். அவ்வளவில் ஆடல்வல்லான் நடமிடத்தொடங்கினார்.

'மிதித்தபொற் பாதமும் எடுத்தபா தார
விந்தமும் சந்தவெம் புலித்தோல்
விளங்கிய விடையும் உந்தியுஞ் சுழியும்
மேனிவெண் ணீற்றின தொளியும்
கதித்தநற் கனக மேருநான் கனைய
கனசதுர்ப் புயங்களும் காள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டமும் முகமும் சென்னியுஞ் சரியே
கண்டுகண் களிக்குநாள் உளதோ
துதித்த கீதங்கள் பலர்புகழ்ந் தேத்தத்
தும்புரு நாரதர் பாடத்
துங்கமா மாயன் மத்தள மிடைமேல்
சுமந்துதொந் தோமென முழக்கத்
திதித் திதிதிதகுவென்றம் பிகை கௌரி
திகழ்திருத் தாளமொத் திசைப்பத்
தில்லையம் பலத்தே திருநடம் புரியும்
தேவனே சிதம்பரே சுரனே'

என்றவாறாகக் குருநமச்சிவாயர் பாடிப்பரவி நின்றார். அம்பலவாண னின் அழகிய ஆடல்கண்ட அந்தணரெல்லாம் பரவசத்தராய் வீழ்ந்து வணங்கி அசைவற்றிருந்தனர், தில்லை மூவாயிரவர் ''குருநமச்சிவாயர் கூத்தப்பிரானைப் பாடுகின்றார்; நாம் குருநமச்சிவாயரைப் பாடு வோம்'' என நினைந்து

'வேடனெச்சில் மிகவிரும்பும் வேளவன்றன்மேனிபொன்ற
ஆடனித்தங் காளியொடா டம்பலவர் சந்நிதிக்குக்
கோடிலட்சங் கவிபாடும் குருநமசி வாயரருள்
பாடல்மெச்சி யம்பலவர் பாதகச்சை யாடியதே'

என்று போற்றிப் பாடினர். நீண்டநேரமாக ஆடல் நிகழ்ந்து கொண் டிருந்தது. தில்லைவாழந்தணர்களில் மிகச் சிறந்த சிலர் ''பாதம் நோவுமே'' என இரங்கித் திருக்கூத்தை நிறுத்த வேண்டுமெனக் குருநமச்சிவாயரை வேண்டிநின்றனர். ''ஆடச் சொல்வதும் நிறுத்தச் சொல்வதும் நம்முடைய அதிகாரமோ'' என நினைந்து அவர் பேசாதிருந்தார். தாளம் கொட்டியவர்களும் கைசலித்து நிறுத் தச் சொல்ல வேண்டுமெனக் கேட்டனர். குருநமச்சிவாயர்,

'தகுதத்தா தாதகியெந் நாடகத்திற் கேற்ற
தகுதித்தா ளுஞ்சிலம்பும் தானாம் - அகுதப்பா
பாரே இனியமையும் பொன்னம் பலத்தாடு
வாரே திருத்தாண் டவம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தூக்கியகால் நோகாதோ துட்டன் முயலகன்மேல்
தாக்கியகால் தானுஞ் சலியாதோ - ... வாக்கா
தினவரதா தில்லைத் திருத்தாண் டவா நீ
அனவரதங் கூத்தாடி னால்'

என்று பாடினார். அவ்வளவில் திருக்கூத்து நின்றது.

குருநமச்சிவாயர் தில்லைச்சிற்றம்பலத்தில் உறைந்த நாட்களில் ''சிதம்பரவெண்பா'' முதலிய நூல்களைப் பாடினார். பல அறக்கட்டளைகளை நிறுவினார். அவற்றை விரிவாக நடத்த எண்ணித் தம் பிரான்கள் 72பேரை நியமித்து அவர்களுக்குப் பல்லக்கு விருது முதலிய சிறப்புக்களைக் கொடுத்து நாடெங்கும் அனுப்பினார். இதனால் சர்வசனத்துக்குமான சர்வகட்டளை சிறப்புற நிகழலாயிற்று.

குருநமச்சிவாயர் சிதம்பரத்தில் நீண்டநாள்வாழ்ந்து திருப்பணிகள் செய்து திருப்பெருந்துறையில் வீடுபேறெய்தினார்.

## குருநமச்சிவாயரின் குருபூசைத்தினம்

வந்திஸ் வரவருடம் வைகாசி தேதிநவம்
இந்துதினம் நாழிகை யேழரைமேல் - வந்தகுரு
தானாம் அருணகிரி தாணுசிவ லிங்கத்துள்
ஆனான் நமச்சிவா யன்.

## கல்வெட்டுப் பாடல்

''தென்னருணை மருவுகுகை நமச்சிவாய
தேவர் சிஷ்யன் குருநமச்சி வாயன்செய்யும்
மன்னுபணி விடையாகப் புலியூர்ச் செம்பொன்
மன்றுடையான் பூசைகொண்டு மகிழ்ந்துவாழ்க
இந்நிலமெலாந் தழைக்க அரசூர்ப் பத்து
இலிங்கபுரச் சாதனக்கல் எழுதிநாட்டி
நன்நெறிசேர் காலாட்கள் தோழன் சின்ன
நல்லநயி னான்கொடுத்து நடத்தி னானே.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

## அஞ்செழுத்தை ஓதென்றான் எங்கள் குருநாதன்

1) அஞ்செழுத் தாலே அனைத்தும் ஆயின
அஞ்செழுத் தாலே அனைத்தும் உதித்தன
அஞ்செழுத் தாலே அனைத்தும் நிலைத்தன
அஞ்செழுத் ததிசயம் ஆரறி வாரே.

2) அஞ்செழுத் தாலே ஆக்கை பிறந்தது
அஞ்செழுத் தாலே ஆன்மா சிறந்தது
அஞ்செழுத் தாலே ஆனந்த மாயிற்று
அஞ்செழுத் துள்ளே அடங்கிநின் றேனே.

3) அஞ்செழுத் தாலே அரனடி காணலாம்
அஞ்செழுத் தாலே அகிலத்தை யாளலாம்
அஞ்செழுத் தாலே அகவினை தீர்க்கலாம்
அஞ்செ ழுத்துமென் நெஞ்சம் புகுந்ததே.

4) ''நமச்சி வாயவே நான்மறை யாகமம்
நமச்சி வாயவே மந்திர தந்திரம்
நமச்சி வாயவே நம்முட லுயிர் பொருள்
நமச்சி வாயவே நற்றுணை யாகுமே''

5) நமச்சி வாயவே நாம்சொல்லும் மந்திரம்
எமக்கி னிக்குறை யொன்றுமே யில்லை
தமர்பிற ரென்னுந் தளையுந் தீர்ந்தோம்
சமமா யுயிரெல்லாந் தாம்நினை வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம்.

6) அஞ்செழுத்தை வழுத்திடேன்கெட்ட அவாவழுக்கா றறுத்திடேன்
கொஞ்சமேனுமென் நெஞ்சிலன்பு கொள்கிலேனஞ்சைவெல்கிலேன்
துஞ்சவேவந்து தோன்றினேனொரு துணையுங்காண்கிலேன்
தெய்வமே
வஞ்சனேனுனை நான்மறக்கினும் வழுத்துநா நமச்சிவாயவே.

7) ஓடுகங்கை யுடன்மதிகொன்றை யுரகம்வைத்த சடையனே
பாடுவார்பசி நோய்வறுமைபகைத்திடாவண்ணம் அருள்செய்வாய்
தேடுவார்தங்கள் இதயமாமலர் தினமும்வாழ்ந்திடு தெய்வமே
நாடினேனுனை நான்மறக்கினும் நவிலுநா நமச்சிவாயவே.

யோகசுவாமிகள் - நற்சிந்தனை

116ՁՁ, 5.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித செபத்தியார் அச்சகம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org